
# ஸ்திரீகள்



சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

பெண்கள் பிரசங்கம் செய்வதனால் பாதகமில்லை என்று அவன் கூறினால், அவன் உங்களிடம் பொய் சொன்னான்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஸ்திரீகள் உபதேசம் பண்ணவோ அல்லது போதிக்கவோ கூடாது

## WOMEN NOT TO “PREACH” OR “TEACH” MEN

--------------

### 1 தீமோத்தேயு 2:11–14

11. ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்க முடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள்.

12. உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்.

13. என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக் கப்பட்டாள்.

14. மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.

## 1 கொரிந்தியர் 14:34–35

34. சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது.

35. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் விசாரிக்கக் கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே.

அவன் அவளை தேவனுடைய சித்தத்திலிருந்து விலகச்செய்து, அவன் செய்யக் கூடாத ஒன்றை செய்யக் காரணமாயிருந்து, அதன் மூலம் மானிடவர்க்கம் முழுவதற்கும் மரணத்தை விளைவித்தாள். அதனால் தான் ஒரு பெண் போதிக்கவோ, பிரசங்கம் செய்யவோ, தேவனுடைய வார்த்தையை எந்த விதத்திலும் கையாளவோ கூடாது என்று வேதம் அவளுக்கு தடை விதித்துள்ளது. சகோதரியே, உங்களில் அனேகர், “பிரசங்கம் செய்வதற்கு தேவன் என்னை

அழைத்திருக்கிறார்" என்று கூறுகிறீர்கள் என்று நானறிவேன். நான் உங்களுடன் வாதாடப் போவதில்லை. ஆனால் நீங்கள் அப்படி செய்யக் கூடாதென்று தேவனுடைய வார்த்தை உரைக்கிறது என்பதை உங்களிடம் கூற விரும்புகிறேன். "அவள் உபதேசம் பண்ணவும் அதிகாரம் செலுத்தவும் கூடாது. அவள் அமைதலாயிருக்க வேண்டும்" (1 தீமோத்தேயு 2:12).

"நான் அப்படி செய்ய கர்த்தர் என்னிடம் கூறினார்" என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அதை நான் துளிகூட

சந்தேகிக்கவில்லை. அன்றிரவு நான் பிலேயாமைக் குறித்து அளித்த செய்தியை கேட்டீர்களா? பிலேயாம் முதலில் தேவனுடைய திட்டவட்டமான தீர்மானத்தை பெற்றான் “அதை செய்யாதே” என்று அதன்பின்பும் அவன் அதில் நிலைத்திருக்க விரும்பின காரணத்தால், முடிவில் அவன் சென்று அதை செய்யும்படி கூறினார். தேவன் ஒருக்கால் உங்களை பிரசங்கிக்க அனுமதிக்கலாம். நான் இல்லை யென்று சொல்லவில்லை. ஆனால் அது அவருடைய மூலவார்த்தையின்படியும்

திட்டத்தின்படியும் அமைந்திருக்க வில்லை. அவள் கீழ்படிந்திருக்க வேண்டுமென்று நியாயப்பிரமாணமும் கூறுகிறதே. உண்மை. எனவே அவள் அப்படி செய்யக்கூடாது.

**மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல், ஏப்ரல் 29, 1965, பக்கம் 38**

ஒரு ஸ்திரீக்கு அரசியலில் எந்த வேலையும் கிடையாது. அவளுக்கு சபையில் எந்த வேலையோ அதிகாரமோ கிடையாது. அவளுக்குள்ள இடம் மனிதனின் ராணி என்னும் முறையில் வீடு மாத்திரமே.

அதற்கு வெளியில் அவளுக்கு ஒன்றுமேயில்லை. அது உண்மை யென்று நாமறிவோம். நீங்கள் எங்குமே காணமுடியாது. அது பழமை நாகரீகங்கொண்டதாய் ஒலிக்கலாம். ஆனால் அதற்கு நான் பொறுப்பு.

**இதை அறியாமலிருக்கிறாய், ஆகஸ்டு 15, 1965, பக்கம் 18**

பெண்கள் பிரசங்கம் செய்வதனால் பாதகமில்லை என்று அவன் கூறினால், அவன் உங்களிடம் பொய் சொன்னான்.

**சர்ப்பத்தின் வித்து, செப்டம்பர் 28, 1958, பத்தி எண் 289**




சபையில் பெண்கள் முதன்மை
ஸ்தானத்தை வகிக்கவும்,
போதகர்களாயிருக்கவும் தடை
செய்யப்பட்டுள்ளனர்

# ஆனால் ஒரு ஸ்திரீக்குள்ள உரிமை என்னவென்றால்

## BUT A WOMAN DOES HAVE THE RIGHT

பெண்கள் தீர்க்கதரிசனம் உரைக்கவும், அந்நிய பாஷைகளில் பேசவும், வியாக்கியானம் செய்யவும் வரமளிக்கப்பட்டுள்ளனர்; ஆயினும் பிரசங்கிகளாக இருக்க அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் பிரசங்கிகளாக இருத்தல் கூடாது. சபைகளில் பிரசங்கிக்க அவர்கள் தடை

செய்யப்பட்டுள்ளனர் என்பது சரிதான். சபையில் பெண்கள் முதன்மை ஸ்தானத்தை வகிக்கவும், போதகர்களாயிருக்கவும் தடை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் எல்லா வரங்களைப் பொருத்தமட்டில், பெண்களுக்கு, 1 கொரிந்தியர் 12ம் அதிகாரத்தின்படி, எல்லா வரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்; ஒன்றோ அல்லது ஒன்பது வரங்களில் எதையாகிலும் பெற்றுக்கொள்ளவோ இயலும். அவளுடைய வரங்கள் உரிய நேரத்தில் உரிய ஸ்தானத்தில் அதற்குரிய செய்தியைத் தெரிவிக்கக் கூடாதபடிக்கு

அவளுக்கு கட்டு ஏதும் இல்லை. ஒவ்வொரு செய்தியும் அதனதன் வேளைக்காக காத்திருக்கிறது. அதாவது அந்தந்த வேளையில் உரிய செய்தியானது வருகிறது.

*****

ஆனால் ஒரு பெண்ணுக்கு வரங்களைப் பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.

**பத்மு தீவு தரிசனம், டிசம்பர் 4, 1960, மாலை, பத்தி எண் 50, 51**


E.C.18

# ஸ்திரீகள் புருஷர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஸ்திரீகள் புருஷர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை

# WOMEN SUBJECT TO HUSBANDS

----------

ஆதியாகமம் 3:16

16. அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதி யாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும்,

அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார்.

1 பேதுரு 3:1

1. அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து,

1 பேதுரு 3:5,6

5. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த

ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்.

6. அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளை களாயிருப்பீர்கள்.

## எபேசியர் 5:22–24

22. மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.

23. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

24. ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்.

## கொலோசேயர் 3:18

18. மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்.

அன்றொரு இரவு ஓரிடத்தில் நான், ஸ்திரீகள் தங்கள் கணவர்களுக்கு கீழ்படிய வேண்டுமென்று பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். கீழ்படிவதா? ஆம்! அது நீண்ட காலம் முன்பே விவாக ஆராதனை ஒழுங்கிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. ஆனால்... அவர்கள் ஒருக்காலும் கீழ்ப்படியப் போவதில்லை. இல்லை, ஐயா! அவர்கள் அமெரிக்காவில் வாழ்கின்றனர். அவர்கள் கீழ்ப்படியப் போவதில்லை. ஆனால் நீங்கள் கீழ்ப்படியாமல் இருந்து கொண்டே, உங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளாதீர்கள்.

ஏனெனில் அப்படி செய்யும் நீங்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. நீங்கள் எவ்வளவு தான் நடனமாடி, அந்நிய பாஷை பேசினாலும் எனக்குக் கவலையில்லை. நீங்கள் கணவருக்கு கீழ்படியாத வரைக்கும், தேவனுடைய சித்தத்துக்கு புறம்பாய் இருக்கிறீர்கள்.

**உன் வாழ்க்கை சுவிசெஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?, ஜூன் 30, 1963, பத்தி எண் 80**

சகோதரிகளாகிய உங்களில் சிலர், இங்குள்ளவர்கள் அல்ல— இவ்விதம் கூறுவதை என்னால்

கேட்க முடிகிறது. "நான் என் கணவருக்குக் கீழ்படிவதா? அவரை எனக்குக் கீழ்ப்படிய வைப்பேன்." அங்கு தான் நீங்கள் தவறு செய்கிறீர்கள். "வீட்டை காக்கிறவர்களாயும் கற்புள்ளவர் களாயும் இருப்பதா? வேதம் என்ன கூறினாலும் கவலை யில்லை. என்னைத் தனியே விட்டு விடுங்கள்" என்கிறீர்கள். சகோதரியே, கவனி! அது இருளின் காலங்களில் எழுந்த சத்தமல்ல, அது இன்றைய சத்தம். ஜலப்பிரளயத்திற்கு முன்னாலிருந்த காலத்தில் மாத்திரம் அப்படி

நடக்கவில்லை. இன்றைக்கும் அவ்வாறே நடந்து வருகிறது.

"நான் நவீன பெண்மணி. நான் அமெரிக்காவில் குடியிருக்கிறேன்" என்று அவர்கள் கூறுகின்றனர். நீ பன்றி வளர்க்கும் பட்டியில் வாழ்ந்தாலும், அமெரிக்காவில் வாழ்ந்தாலும் தேவனுக்கு எவ்வித வித்தியாசமும் இல்லை. உன் இருதயத்தில் நீ எப்படியிருக்கிறாயோ அதுதான் நீ யாரென்பதைக் காண்பிக்கிறது. சகோதரியே, நீ உன்னை நவீன பெண்மணி என்று எண்ணிக்கொள்ளாதே. ஜலப்

பிரளயத்திற்கு முன்னாலிருந்த நோவாவின் காலத்திலும் உன்னைப் போன்ற பெண்கள் இருநதனர். நீ இக்காலத்தில் செய்கிறதையே அவர்கள் அக்காலத்தில் செய்தனர். எனவே நீ நவீனமானவள் என்று எண்ணிக்கொள்ளாதே. அப்படித் தானே ! பாருங்கள், ஜலப்பிரளயத்துக்கு முன்னாலிருந்த காலத்திலேயே அவர்கள் அப்படித்தான் நடந்து கொண்டனர். இன்றைக்கும் அவ்விதமாகவே நடக்கின்றனர். எனவே இது மறுபடியும் இருளின் காலமாயுள்ளது.

இவ்விதம் உன் மனைவி நடந்து கொள்ள அனுமதிக்கும் ஆண்மகனாகிய நீ, இனி ஒருபோதும் தேவகுமாரனல்ல. நீ சோதோமில் விழுந்து விட்டாய். உன் மனைவி உன் மேல் ஆதிக்கம் செலுத்த நீ விட்டுக் கொடுத்து விட்டாய். ஓ, என்னே!

**அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு, ஜூன், 23, 1963, பத்தி எண் 154—156**


*****

பெண்களுக்கு வீட்டில் தங்க விருப்பமில்லை. அவர்களுக்கு

குடும்பத்தைக் கவனித்துக் கொள்ள பிரியமில்லை. அவர்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்ள யாரையாகிலும் அமர்த்திவிட்டு, விருந்துகளுக்கு சென்று விடுகின்றனர். சிறுவர்கள் குற்றம் புரிகின்றனர். இவை யாவும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. தலைமயிர் கத்தரித்தல், குட்டை கால்சட்டை அணிதல், அழகுபடுத்தும் சாதனங்களை உபயோகித்தல். பெண்களின் அழகு நாளடைவில் அதிகரித்துக் கொண்டே போகிறது. இயேசு கூறினது போன்று தேவகுமாரர் பிசாசின் கண்ணிகளில்

விழுகின்றனர். அது அவ்வாறே நிகழ வேண்டும். அவர் கூறின விதமாகவே இன்று நிறைவேறிக்கொண்டு வருகிறது, அவர், “இவைகள் சம்பவிக்கும்போது, இந்த சந்ததி (ஒரு சந்ததிக்கு நாற்பது ஆண்டுகள்) ஒழிந்து போகாது” என்றார். அதை யோசித்துப் பாருங்கள்.

**அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு, ஜூன் 23, 1963, பத்தி எண் 176**







*American Magpie*

CORVUS PICA

# ஸ்திரீகள் தங்களுடைய மயிரை கத்தரித்துக் கொள்வது ஏன் தவறாயிருக்கிறது?



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஸ்திரீகள் தங்களுடைய மயிரை கத்தரித்துக் கொள்வது ஏன் தவறாயிருக்கிறது?

## WHY IT'S WRONG FOR WOMEN TO BOB THEIR HAIR?

-----------

1 கொரிந்தியர் 11:4–6

4. ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை

மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான்.

5. ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே.

6. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக்கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும்

சிரைக்கப் படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக்கொண்டிருக்கக்கட வள்.

## 1 கொரிந்தியர் 11:13–15

13. ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக்குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள்.

14. புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்கு கனவீனமாயிருக்கிறதென்றும்,

15. ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது

அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப் பட்டிருக்கிறதே.

குட்டை முடியுடன் பரலோகம் எப்படி செல்வாய்? ஏனெனில், "தலைமயிர் கத்தரிக்கப்படுவது ஸ்திரீக்கு வெட்கமானால்" என்று தேவன் கூறினார். மனைவி என்ற அடிப்படையையே அவள் மறுதலிக்கிறாள் என்று அர்த்தம். தேவன் மாறுவதில்லை. அது அவர் வார்த்தை, நண்பனே. நீ செவி கொடுத்தால் நலம்.

**பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம், நவம்பர் 19, 1961, பத்தி எண் 385**

இப்பொழுது, "ஒரு ஸ்திரீ வழக்கத்திற்கு மாறான ஒரு காரியத்தை செய்கின்றாள்", அவள் தன் மயிரை வெட்டிக்கொண்டதால் தன் தலையை கனவீனப் படுத்துகின்றாள், வாழத் தகுதியற்றவள் என்று வேதாகமம் எப்படி கூற முடியும், அப்படியானால் நீண்ட மயிர்**...?...**

**சாயங்கால தூதன், ஜனவரி 16, 1963, பத்தி எண் 166**

மயிர் கத்தரித்தல் அவளை கனவீனமான ஸ்திரீயாக ஒரு வேசியாக மாற்றுகின்றது.

**சாத்தானின் ஏதேன், ஆகஸ்ட் 29, 1965, பத்தி எண் 139**

வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், தலைமயிரைக் கத்தரித்துள்ள, அல்லது ஆண்களின் உடையை அணிந்துள்ள எந்தப் பெண்ணும் தேவனுடைய பார்வையில் சபிக்கப்பட்டவளே.

**மூன்றாம் யாத்திரை, ஜூன் 30, 1963, பத்தி எண் 236, பக்கம் 55**

குட்டையான தலைமுடி முதன் முதலாக ரோமாபுரியில் தொடங்கினது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

***சிறந்த வேலைபாடு, ஜூலை 5, 1964, பத்தி எண் 114***

அவர்கள் கூந்தலை கத்தரித்துக் கொண்டு, உலகப் பிரகாரமான உடைகளை உடுத்திக்கொண்டு, அந்நிலையில் தெருக்களில் நடந்து செல்கின்றனர். தேவனுடைய வேதாகமம் அதற்கு விரோதமாய் எச்சரிக்கிறது. கூந்தல் கத்தரிக்கப்பட்ட ஒரு பெண் ஜெபம் செய்யக்கூடாது என்று அது தடை

விதிக்கிறது. ஒரு மனிதன்... அவள் அப்படி செய்தால், தன் கணவனுக்கு நடத்தை கெட்டவளாகி விடுவாள். அவளை விவாகரத்து செய்து அனுப்பி விட அவனுக்கு பூரண உரிமையுண்டு. அது முற்றிலும் உண்மை. தேவனுடைய வார்த்தை அவ்வாறு கூறுகின்றது. ஒரு பெண் அதை அறிந்திருந்தும், குட்டை மயிர் வைத்துக் கொண்டு தன்னை கிறிஸ்தவள் என்று அழைத்துக் கொள்கிறாள்.

**உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?, ஜூன் 30, 1963, பத்தி எண் 223**

"முடியை வெட்டிக்கொள்ளுவதால் என்ன தவறு இருக்கிறது" என்று அவள் கூறுகிறாள். சகோதரனே, இங்கு ஒரு நிமிஷம் நிதானிப்போம். இப்பொழுதே நான் பேசிக் கொண்டிருக்கையில் நான் சொன்ன இந்த காரியத்தைப் பற்றி, யாரோ மனதில் இடறுண்டு கோபப்படுவதாக உணருகிறேன். தொலைபேசி வாயிலாக இவ்வாராதனையில் பங்குகொள்ளும் ஏதாவது ஒரு நபராக அது இருக்கலாம். கவனியுங்கள், ஒரு ஸ்திரீக்கு நீண்ட தலைமுடி இருப்பது,

அவளுக்கு நசரேய பொருத்தனையாகும். சிம்சோனுக்கு நீண்ட முடியிருந்தது. அவனுக்கு நசரேயப் பொருத்தனை யாயிருந்தது. ஒரு ஸ்திரீ தன் தலைமுடியை வெட்டிக் கொள்வாளென்றால், அவள் முழுவதுமாக தன்னுடைய நசரேயப் பொருத்தனையை மறுதலிக்கிறாள். அவள் கிறிஸ்துவுக்கு மணவாட்டியாயிருப்பதைக் காண்பிக்கும் நசரேய விரதத்தை மறுதலிக்கிறாள். ஏனெனில் அந்த ஒரு காரியம் எல்லாவற்றையும் அடியோடு கெடுத்துவிடுகிறது. சரியாக அப்படித்தான். நசரேயன்

என்னப்பட்டவன், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தன்னைப் பிரதிஷ்டை செய்து கொண்டவன் ஆவான். சிம்சோன் ஒரு காலத்திற்காக, ஒரு நோக்கத்திற்காக தன்னைப் பிரதிஷ்டை செய்து கொண்டிருந்தான். எனவேதான் அவன் நீண்ட முடியை உடையவனாய் இருந்தான்.

தேவனுடைய பிள்ளையாயிருக்கிற ஒரு ஸ்திரீயானவள், தான் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்குள்ளும், பிரதிஷ்டை செய்து கொண்டவள் என்பதைக் காண்பிக்கும்படி, தனது

முடியை நீளமாக வளர விடுகிறாள். ஸ்திரீயானவள் தன் தலை முடியை வெட்டிக்கொண்டால், அவள் எவ்வளவு ஆவியில் நடனமாடினாலும், பாடல் குழுவில் இருந்து பாடினாலும், அந்நிய பாஷைகளில் பேசி மேலும் கீழும் குதித்தாலும், எல்லாவிதமான உதவிச் சங்கங்களில் இருந்தாலும், அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை! அவள் மரித்தவள்தான். 1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தின்படி, அது **’கர்த்தர் உரைப்பது என்னவென்றால்’** என்னும் தேவனுடைய

வார்த்தையாயிருக்கிறது.

பார்த்தீர்களா? அவள் தன்னுடைய நசரேய விரதத்தை மறுதலித்து தன்னை இந்த நவீன யுகத்தின் தேவனுக்கு விற்றுப்போட்டுவிட்டாள். அவள் அதைச் செய்துவிட்டாள். அப்பொழுது, இக்காரியத்தைச் செய்துள்ள ஸ்திரீயே, பெண்மணியே, நீ வெட்கத்திற் குரியவள்.

**இப்பொல்லாத காலத்தின் தேவன், ஆகஸ்டு 1, 1965, பத்தி எண் 146, 147**

ஒரு விதையினால் முடியாது. தேவனுடைய வித்து தலைமயிரைக் கத்தரித்துக் கொள்ளும் ஒரு

ஸ்திரீயை தோன்றச் செய்யாது. அது அப்படி செய்யாது. அதனால் அவ்விதம் செய்ய முடியாது. அவ்விதம் செய்யவே முடியாது. ஏனெனில் வேதம் அவ்விதம் கூறுகின்றது. பாருங்கள், அது அவ்விதம் செய்ய முடியாது. இல்லை, ஐயா.

தேவனுடைய வார்த்தைக்குத் தாழ்த்துவது மிகக் கடினமான செயல் போல் தென்படுகிறது.

**மறுரூபப்படுத்தும் வல்லமை, அக்டோபர் 31, 1965, பத்தி எண் 251**


A.Thorburn 1914

ஒரு ஸ்திரீ தன் தலைமுடியை
வெட்டிக் கொள்வாளென்றால்,
அவள் முழுவதுமாக தன்னுடைய
நசரேயப்பொருத்தனையை
மறுதலிக்கிறாள்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# அவள் கிறிஸ்துவின் ஒரு மணவாட்டியாயிருப்பதை மறுதலிக்கிறாள்

# SHE DENIES THAT SHE IS A BRIDE TO CHRIST

---------

ஒரு ஸ்திரீ தன் தலைமுடியை வெட்டிக் கொள்வாளென்றால், அவள் முழுவதுமாக தன்னுடைய நசரேயப்பொருத்தனையை மறுதலிக்கிறாள். அவள் கிறிஸ்துவுக்கு மணவாட்டியாயிருப்பதைக் காண்பிக்கும் நசரேய விரதத்தை மறுதலிக்கிறாள்.

**இப்பொல்லாத காலத்தின் தேவன், ஆகஸ்டு 1, 1965, பத்தி எண் 146**






ஸ்திரீயானவள்
மனுஷருக்கு
முன்பாக
கவர்ச்சியாக
உடையுடுத்துவது
ஏன் தவறாயுள்ளது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஸ்திரீயானவள் மனுஷருக்கு முன்பாக கவர்ச்சியாக உடையுடுத்துவது ஏன் தவறாயுள்ளது

## WHY IT'S WRONG TO DRESS WRONG BEFORE MAN

---------------

மத்தேயு 5:28

28. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில்

அவளோடே
விபசாரஞ்செய்தாயிற்று.

## 1 தீமோத்தேயு 2:9–10

9. ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்,
10. தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர் களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே

**நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்.**

இது, தேவனுடைய மூல வார்த்தையின்படி, “ஒரு ஸ்திரீயானவள் புருஷனுடைய வஸ்திரத்தை உடுத்துக் கொள்வதும், புருஷனானவன் ஒரு ஸ்திரீயினுடைய வஸ்திரத்தை உடுத்துக்கொள்வதும் அருவருப்பானதாகும்.” அது மூல வார்த்தையின்படி அருவருப்பாகும். அதைக் குறித்து சிந்தியுங்கள்.

**சாத்தானின் ஏதேன், ஆகஸ்ட் 29, 1965, பத்தி எண் 141**

இச்சை என்னும் சக்தியின் மூலம் ஏவாள் ஆதாமைப் பாவத்தில் வீழ்த்த சாத்தான் அவளை உபயோகப்படுத்தினான் என்பதைக் கவனிக்கவும். இன்றைக்கும் அதுவே சம்பவிக்கின்றது. பெண்கள் மயிர் கத்தரித்து, முகங்களில் வர்ணம் பூசி, கவர்ச்சியான ஆடையணிந்து காணப்படுகின்றனர். பாருங்கள்? இவை ஒவ்வொன்றும் தேவனுடைய வார்த்தைக்கு முரண்பட்டது என்பதை அவள் அறியாமலிருக்கிறாள். மயிர் கத்தரித்தல் அவளைக் கனவீனமான ஸ்திரீயாக ஒரு

வேசியாக—மாற்றுகின்றது. சிறிய கால்சட்டை அணிதல் அவளை அவமதிப்புக்குள்ளாக்குகின்றது. அவள் பாலுணர்வைத் தூண்டும் ஆடைகளை அணிதல் அவளை ஒரு வேசியாக்குகிறது. ஆனால் அவள் அதை அறியாமலிருக்கிறாள். அவள் அறியாமலிருப்பது தேவனுடைய பரிசுத்தத்தைப் பெற்றிருப்பதனாலல்ல, சாத்தானின் இச்சை கொண்டிருப்பதனால். ஆதாம் அவளை இச்சிப்பதற்கு ஏவாள் காரணமாயிருந்தாள்.

**சாத்தானின் ஏதேன், ஆகஸ்ட் 29, 1965, பத்தி எண் 139**







# மனிதரோடு ஸ்திரீயினுடைய நடத்தை

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# மனிதரோடு ஸ்திரீயினுடைய நடத்தை

# WOMEN'S BEHAVIOR TOWARDS MEN

---------

இப்பொழுது பாருங்கள். ஒரு ஸ்திரீயானவள் ஒரு மனிதனை மணந்து, பிறகு இன்னொரு மனிதனை அவள் நேசித்து, அவனோடு அவள் தொடர்பு கொண்டு, அந்நிலையில் அவள் தன் கணவனிடம் திரும்பி வந்தால்,

அவன் அவளை தள்ளிவிடவேண்டும் அது சரிதானே? அவனுக்கு அவள் உண்மையாயிருப்பதாக ஆணையிட்டு இருப்பதால், அவள் அவனுக்கு உண்மையாயிருக்க வேண்டுமே.

**இப்பொல்லாத காலத்தின் தேவன், ஆகஸ்டு 1, 1965, பத்தி எண் 162**

ஒரு ஸ்திரீயானவள் வேறு எந்த புருஷனுக்கும் கண்சாடைக் காட்டக் கூடாது. அவள் முழுவதுமாக ஒரு மணவாளனுக்கு மணவாட்டியானபடியால், வேறொருத்தனுக்கு சைகை

காட்டுவதோ உணர்ச்சிகளைக் காட்டுவதோ கூடாது.


**இப்பொல்லாத காலத்தின் தேவன், ஆகஸ்டு 1, 1965, பத்தி எண் 162**

இன்றைக்கு ஒரு ஸ்திரீ விவாகம் செய்து கொண்டால், அவள் விவாகம் செய்து கொண்டவள் என்பதற்கு அடையாளமாக ஒரு விவாக மோதிரம் அணிய வேண்டும். அதுவே மற்ற மனிதன் அவளோடு எந்தக் காரியத்தையும் செய்யாதபடிக்கு காத்துக் கொள்வதாயிருக்கிறது. எனவே அவர்கள் பார்க்கும் போது, அவள் ஒரு விவாகமான

ஸ்திரீயாயிருக்கிறாள் என்பதைக் காண்கின்றனர்.

**கர்த்தருடைய இரண்டாம் வருகை, ஏப்ரல் 17, 1957, பத்தி எண் 56**

-------



# புருஷன் அவளை மறுபடியும் சேர்த்துக்கொள்ளக்கூடாது


## HUSBAND IS NOT TO TAKE HER BACK

ஒரு ஸ்திரீ புருஷனைவிட்டுப் பிரிந்து, வேறொருவனோடு வாழத்தலைப்பட்டால், அவள் விபசாரி என்றும், புருஷன் அவளை மறுபடியும் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்றும் வேதம் போதிக்கிறது.






A Thorburn
1928








ஸ்திரீகள் அலப்புகிற
வர்களாகவும்
வீணலுவற்கார்
களாயும்
இருக்கக்கூடாது

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஸ்திரீகள் அலப்புகிறவர்களாகவும் வீணலுவற்காரிகளாயும் இருக்கக்கூடாது

## WOMEN NOT TO BE TATTLERS AND BUSYBODIES

--------

1 தீமோத்தேயு 5:13

13. அதுவுமல்லாமல், அவர்கள் சோம்பலுள்ளவர்களாய், வீடுவீடாய்த் திரியப்பழகுவார்கள்;

**சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல, அலப்புகிறவர்களாயும் வீணலுவற்காரிகளாயும் தகாத காரியங்களைப் பேசுகிறவர்களாயுமிருப்பார்கள்.**

வர்த்தகர் சாட்சி கூற வேண்டும். ஸ்திரீகள், வீட்டு பெண்மணிகள் – நீங்கள் வேறொருவர் வீட்டில் வேலைக்காரியாயிருந்தாலும் – சாட்சி கூறுங்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கென்று உங்களாலான எல்லாவற்றையும் செய்யுங்கள்.

**வேறொருவரால் விளையும் பாதிப்பு, அக்டோபர் 13, 1962, பத்தி எண் 72**

சீமாட்டிகளே, நான் இதை கனத்துடன் கூறுகிறேன். ஒரு ஸ்திரீயானவள் சமையல் அறையை விட்டு வெளியேறுவாளானால், அவள் தன்னுடைய ஸ்தானத்திலிருந்து வெளியே சென்று விட்டாள். அது சரியே. அவள் அந்த இடத்தைச் (சமையல் அறை – தமிழாக்கியோன்) சார்ந்தவளாகத்தான் இருக்கின்றாள். அதற்கப்பால், அவளுக்கு வேறு இடம் கிடையாது. ஆகவே இப்பொழுது, அது அவர்களுக்கு கடினமாக இருக்கும். ஆனால் வேதம் என்னவென்றும், சத்தியம் என்னவென்பதை

மாத்திரமே நான் கூறுகிறேன். புருஷனானவன் வீட்டிற்கு தலைவனாய் இருந்து வந்தான். வேதாகம நாட்களில் அவ்வாறே இருந்து வந்தது.

**மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956, பத்தி எண் 23**

வர்த்தகர் சாட்சி கூற வேண்டும். ஸ்திரீகள், வீட்டு பெண்மணிகள் – நீங்கள் வேறொருவர் வீட்டில் வேலைக்காரியாயிருந்தாலும் – சாட்சி கூறுங்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கென்று உங்களாலான எல்லாவற்றையும் செய்யுங்கள். ஆனால் உங்கள் சொந்த

கருத்துக்களை உள்ளே புகுத்தாதீர்கள். செய்தி கூறுவதை மாத்திரமே கூறி அப்படியே சென்று கொண்டிருங்கள் (பாருங்கள்?). அப்பொழுது ஒருக்கால் உங்களால் மற்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம்.

**வேறொருவரால் விளையும் பாதிப்பு, அக்டோபர் 13, 1962, பத்தி எண் 72**

இப்பொழுது கவனியுங்கள். குட்டையான ஆடை உடுத்துதல், மயிரைக் கத்தரித்தல் போன்ற காரியங்களை செய்யும் பெண்களைக் குறித்த வேத உபதேசத்திற்கு செல்வோமானால் காரியம் இன்னும் எவ்விதமாக இருக்கும்? அது

அவபக்தியாயிருக்கிறது. பெண்கள் பலவிதமான அரங்குகளுக்கு சென்று, சீட்டு விளையாடுதல் மற்றும் வீண்வார்த்தைகளை பேசிக்கொண்டு, தங்கள் நாவுகளை அடக்கிக்கொள்ளத் தெரியாதவர்களாக இருக்கின்றனர்.

**ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி, அக்டோபர் 14, 1962 காலை**




உள்ளாடைகள்
தெரியும்படியான
ஸ்திரீகளுடைய உடைகள்

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# உள்ளாடைகள் தெரியும்படியான ஸ்திரீகளுடைய உடைகள்

# WOMEN'S SEE – THROUGH CLOTHES

------------

மேடையின் மேலுள்ள ஸ்திரீகளில் சிலர் முழங்காலுக்கு மேல் ஆடைகளை அணிந்து, அவை மிகவும் இறுக்கமாக தைக்கப்பட்டு, அவர்களுடைய பெண் உருவத்தையும், அவர்கள் செய்யும் ஒவ்வொரு அசைவையும்

வெளிப்படையாக காண்பித்து, அவர்களுடைய ஆடைகளின் வழியாக அவர்களுடைய உள்ளாடைகள் காணப்பட்டு, குட்டை கால் சட்டை, இரு துண்டு நீச்சல் உடை அணிவது போன்று அவ்வளவு மோசமாக உள்ளது! குருடரான, பெந்தெகொஸ்தே லவோதிக்கேயா போதகர்களே, இன்னும் எவ்வளவு காலம் தேவன் உங்களுடன் பொறுமையாயிருப்பார் என்று எனக்குத் தெரியவில்லை; பார்வையற்ற உங்கள் கண்களின் மீது தேவன் இரக்கமாயிருப்பாராக! உங்கள் கண்கள் திறக்கப்பட்டு நீங்கள் காணத்தக்கதாக, அவர்

இன்றிரவு கலிக்கத்தை வைத்திருக்கிறார்.

**சிந்திக்கும் மனிதனின் வடிகட்டும் பொருள், ஆகஸ்டு 22, 1965, மாலை, பத்தி எண் 155**



அவள் தேவனிடம் அவளுக்குள்ள உரிமையையும் பரலோகத்துக்கு செல்லும் உரிமையையும் பறிகொடுத்து விடுகிறாள்



---

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

# அவள் தேவனிடம் அவளுக்குள்ள உரிமையையும் பரலோகத்துக்கு செல்லும் உரிமையையும் பறிகொடுத்து விடுகிறாள்

**SHE HAS FORFEITED HER RIGHTS TO GOD AND HEAVEN**

--------------

## ரோமர் 7:2,3

2. அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும்

நியாயப்பிரமாணத்தின் படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்.

3. ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல.

ஒரு ஸ்திரீ தன் முதலாம் புருஷன் மரிக்கும் வரைக்கும் மறுபடியும் விவாகம் செய்து கொள்ளக்கூடாது என்று தீர்க்கதரிசி பவுல் இங்கு கூறுகிறான்.

அவளுடைய முதலாம் புருஷன் உயிரோழருக்குமளவும் அவள் மறுபழயும் விவாகம் செய்து கொள்ளக்கூடாது. எக்காரணத்தைக் கொண்டும் அவள் அப்பழ செய்யவே கூடாது.

அவளுடைய முதலாம் புருஷன் உயிரோடிருக்குமளவும்

அவள் தனியாக இருக்கவேண்டும்.

அவள் மறுபடியும் விவாகம் செய்யும் பாவத்தை செய்தால், அவள் விபசாரி என்று கருதப்படுவாள்... (நான் சரீர பிரகாரமாக பேசுகிறேன். அதை ஆவிக்குரியதோடு சம்பந்தப்படுத்திக் காண்பிப்பேன்.)

இந்த ஸ்திரீ அப்படிப்பட்ட பாவத்தைச் செய்வாளானால், அவள் விபச்சாரி என்று அழைக்கப்படுவாள் – அவளுக்கு இரண்டு புருஷர் ஒரே நேரத்தில் உயிரோடிருந்தால்.

**அவள் அப்படி செய்வதன் மூலம், தேவனிடம் அவளுக்குள்ள உரிமையையும் பரலோகத்துக்கு செல்லும் உரிமையையும் பறிகொடுத்து விடுகிறாள் – அவள் நிச்சயமாக பறி கொடுக்கிறாள்.**

**நான் இப்பொழுது படித்த வேதபாகத்தின்படி, அவள் தேவனுடைய ராஜ்ஜியத்திலிருந்து புறம்பாக்கப்படுகிறாள்.**

**கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு, நவம்பர் 25, 1965, பக்கம் 20**




**Only believe,**
**Only believe**
**All things are possible,**
**Only believe.**




சகோ. பினேகாஸ்

போன்: 8838623242, 9551855108

Email: jebakumarsa@gmail.com

www.thefinish.in